அரச நிதிச் சுற்றறிக்கை இல: **PF 443**

**PF/R/03/Cir.2010**
அரச நிதித் திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு-01
2010.05. 22

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாணசபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்
திணைக்களங்களின் தலைவர்களுக்கும்
மாவட்ட செயலாளர்களுக்கும் மற்றும்
அரச கூட்டுத்தாபனங்களினதும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்களுக்கும்

**பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினால் நிர்வகிக்கப்படும் பெற்றோல் நிலையங்களிலிருந்து கடன் அடிப்படையில் எரிபொருளைக் கொள்வனவு செய்தல்**

பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினால் நிர்வகிக்கப்படும் பெற்றோல் நிலையங்களிலிருந்து எரிபொருளை கடன் அடிப்படையில் அரசாங்க அமைப்புக்களுக்கு வழங்கும் முறை உடனடியாக செயல்படும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் அரசாங்க அமைப்புக்கள் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினால் நிர்வகிக்கப்படும் பெற்றோல் நிலையங்களிலிருந்து அவர்களினால் வைப்புச் செய்யப்பட்டுள்ள தொகையின் உச்ச எல்லைக்குட்பட்டதாக எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியும். இல்லாவிடின் அவர்கள் பணத்தைச் செலுத்தியே எரிபொருளை கொள்வனவு செய்ய முடியும்.

02. அரச முகவர்களினால் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து மேற்படி நடைமுறையினை பின்பற்றுவதனூடாக எரிபொருளை கொள்வனவு செய்யும் போது அச்சங்கங்களின் நாளாந்த செலவினச் சிக்கல்கள் குறைக்கப்படுமாதலால், இவ்வழிமுறைக்கு அதிகூடிய முக்கியத்துவம் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ஒப்பம்: பீ.பி. ஜயசுந்தர,**
**திறைசேரிச் செயலாளர்**

பிரதிகள்:
1. செயலாளர், கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகம்
2. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர்
3. கணக்காய்வாளர் நாயகம்.